Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

**செய்தியாளர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,
மலர் Volume : 01 • இதழ் Issue : 77 • ஞாயிற்றுக்கிழமை Sunday • 18.01.2026 • பக்கங்கள் Pages:4 • ₹ 6 • ஈரோடு Erode

# ஜல்லிக்கட்டில் சிறந்த மாடுபிடி வீரர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் அரசு வேலை

## முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவிப்பு





சென்னை: பாரம்பரியமிக்க ஜல்லிக்கட்டு போட்டிகளில் அதிகக் காளைகளை அடக்கிய சிறந்த வீரர்களுக்கு அரசுப் பணி வழங்கப்படும் என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டான உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டிகளை (ஜன.17) காலையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டார். தொடர்ந்து, சிறந்த மாடுபிடி வீரர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் கால்நடை பராமரிப்புத்துறையில் அரசு வேலைவழங்கப்படும். அலங்காநல்லூரில் ரூ.2 கோடியில் ஜல்லிக்கட்டு காளைகளுக்கான பயிற்சி மற்றும் உயர்தரசிகிச்சைமையம் அமைக்கப்படும் என 2 முக்கிய அறிவிப்புகளை அறிவித்தார். தொன்மைநகரமான மதுரையில் தை மாதப் பிறப்பு பொங்கல் விழாவை முன்னிட்டு தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டிகள் தொடங்கும். தை மாதம் 1-ம் தேதி (ஜன.15) மதுரை அவனியாபுரத்தில் ஜல்லிக்கட்டு தொடங்கும். 2-ம்நாள் மதுரை மாவட்டம் பாலமேடு ஜல்லிக்கட்டு நடைபெறும். 3-ம் நாள் உலகப் புகழ் பெற்ற அலங்காநல்லூரில் நடைபெறும்.

அதன்படி உலகப் புகழ் பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டை நடத்த தமிழக அரசு சார்பில் மதுரை மாவட்ட நிர்வாகம்மற்றும்கிராமகமிட்டி சார்பில் விழா ஏற்பாடுகள் நடைபெற்றது.

தொடர்ந்து காலை 7 மணியளவில் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் தொடங்கியது. அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் ஆட்சியர் பிரவீன்குமார் முன்னிலையில் மாடுபிடி வீரர்கள் உறுதிமொழி எடுத்தனர்.

இதில் வெற்றி பெறும் மாடுபிடிவீரர்கள், சிறந்த காளைகளுக்கும் ரூ. 2 கோடி மதிப்புள்ள பரிசுகள் வழங்கப்படுகின்றன. சிறந்தமாடுபிடி வீரருக்கு தமிழக முதல்வர் சார்பில் கார் பரிசும், சிறந்த காளைகளுக்கு துணை முதல்வர் சார்பில் டிராக்டர் பரிசும் வழங்கப்படுகின்றன.

பாலமேட்டில் நேற்று நடந்த ஜல்லிக்கட்டு போட்டிகளை துணை முதல்வர் உதயநிதி தொடங்கி வைத்தார். அதனைத்தொடர்ந்து இன்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடிக்கு செல்லும் வழியில் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டிகளை பார்வையிட வருகை தந்தார். மதுரையிலிருந்து அலங்காநல்லூர் செல்லும் வழி நெடுகிலும் திமுகவினர் திரண்டு வந்து வரவேற்பு அளித்தனர்.

அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டிகளை காண தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் காலை 11.05 மணிக்கு வருகை தந்தார். அவருடன் அமைச்சர்கள்பி.மூர்த்தி, கே.என்.நேரு, பழனிவேல் தியாகராஜன், தங்கம் தென்னரசு, சாத்தூர் ராமச்சந்திரன், எம்பிக்கள் சு.வெங்கடேசன், தங்கத்தமிழ்ச்செல்வன் ஆகியோர் பங்கேற்றனர். பின்பு ஜல்லிக்கட்டு போட்டிகளை ஆர்வமுடன் பார்வையிட்டனர்.

களத்தில் நின்று களமாடிய காளையின் உரிமையாளர் திருச்சி முருகானந்தம், புதுக்கோட்டை மாவட்டம்கைக்குறிச்சிதமிழ்ச்செல்வன், வெளிச்சநத்தம் போலீஸ் சத்யா ஆகியோருக்கு தங்க மோதிரம் பரிசு வழங்கினார்.

பின்னர், தமிழக முதல்வர்மு.க.ஸ்டாலின் முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டு பேசினார். அப்போது அவர் பேசுகையில், "அனைவருக்கும் அன்பான வணக்கம். எல்லோருக்கும் பொங்கல் புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவிக்க விரும்புகின்றேன். மதுரை மண் வீரம் விளைந்த மண். வீர விளையாட்டான உலகப்புகழ் பெற்ற அலங்காநல்லூர் பார்க்கும்போது நமக்கு வீரம் வருகிறது.

இதில் காளைகளை அடக்கும் காளையர்களை பார்க்கும்போது தமிழ் மண்ணுக்கே பெருமையாக இருக்கிறது. திராவிட மாடல் ஆட்சியில் சங்கம் வளர்த்த மதுரையில் அறிவுக்காக கலைஞர் நூற்றாண்டு நூலகம், தமிழர்களின் அடையாளமான வீர விளையாட்டுக்கு கலைஞர் ஏறுதழுவுதல் அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது மிகப்பெரிய சாதனையாகும்.

ஜல்லிக்கட்டு போட்டியை ஒட்டி முதல்வராக சிலவற்றை அறிவிக்க வேண்டும். அப்படி அறிவித்தால்தான் எனக்கு திருப்தியாக இருக்கும். அந்த வகையில் முக்கியமான 2 அறிவிப்புகளை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

பாரம்பரிய ஜல்லிக்கட்டு விளையாட்டுப் போட்டிகளில் அதிக காளைகளை அடக்கி சிறந்து விளங்கும் வீரர்களுக்கு முன்னுரிமை அடிப்டையி'ல கால்நடை பராமரிப்புத் துறையில் பணி வழங்கப்படும்.

மேலும், உலகப் புகழ் பெற்ற அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு காளைகளுக்கான ரூ.2 கோடி மதிப்பில் சிறந்த பயிற்சி மற்றும் உயர்தர சிகிச்சை மையம் அமைக்கப்படும். என்பதை அறிவிக்கிறேன். இதில் உங்களுக்கு மகிழ்ச்சிதானே, அந்த மகிழ்ச்சியான அறிவிப்புகளை அறிவித்த மகிழ்ச்சியோடு செல்கிறேன், என்றார். பின்னர், ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடிக்குபுறப்பட்டுச் சென்றார்.

# "மகளிருக்கு மாதம் ரூ.2000, ஆண்களுக்கும் கட்டணமில்லா பேருந்து திட்டம்"

## அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு



சென்னை: "மகளிருக்கு மாதம் ரூ.2000 வழங்கப்படும், ஆண்களுக்கும்கட்டணமில்லா பேருந்து திட்டம் செயல்படுத்தப்படும்" என முதற்கட்ட தேர்தல் வாக்குறுதிகளை அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

அதிமுக நிறுவனத் தலைவர் எம்ஜிஆரின் 109-வது பிறந்தநாள் விழாவையொட்டிசென்னையில் செய்தியாளர்களை சந்தித்த அக்கட்சி பொதுச் செயலாளர் எடப்பாடி.கே.பழனிசாமி, முதற்கட்ட தேர்தல் வாக்குறுதியாக 5 அறிவிப்புகளை அறிவித்துள்ளார்.

1.மகளிர்நலன் : (குல விளக்குத் திட்டம்) - சமூகத்தில் பொருளாதார சமநிலையை உருவாக்கிட, குலவிளக்கு திட்டத்தின் மூலம் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும், ஒவ்வொரு மாதமும் உதவித் தொகையாக ரூபாய் 2,000/- வழங்கப்படும். இத்தொகை குடும்பத் தலைவியின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

2.ஆண்களுக்கும், மகளிருக்கும் கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டம்: நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் ஆண்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டம் செயல்படுத்தப்படும். ஏற்கெனவே நடைமுறையில் இருக்கும், நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் மகளிருக்கான கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

3.அளைவருக்கும் வீடு (அம்மா இல்லம் திட்டம்): அம்மா இல்லம் திட்டம்' மூலம், கிராமப்புறங்களில் குடியிருப்பதற்கு சொந்த வீடு இல்லாதவர்களுக்கு, அரசே இடம் வாங்கி கான்கிரீட் வீடுகள் கட்டித் தரப்படும்.

அதேபோல், நகரப்பகுதிகளில் சொந்த வீடு இவ்லாதவர்களுக்கு, அரசே இடம் வாங்கி அடுக்குமாடி வீடுகள் கட்டி 'அம்மா இல்லம் திட்டம்' மூலம் விலையில்லாமல் வழங்கப்படும். அதைப் போலவே, ஒரேகுடும்பத்தில்வசிக்கும் பட்டியலின மக்கள், அவர்களுடைய மகன்கள் திருமணமாகி தனிக்குடித்தனம் செல்கின்றபோது, அரசே இடம் வாங்கி. அவர்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டித் தரப்படும்.

4.100நாட்கள் வேலைவாய்ப்புத் திட்டம் 150 நாட்களாக உயர்த்தப்படும்: 100 நாட்கள் வேலைவாய்ப்புத் திட்டம் 125 நாட்களாக உயர்த்தப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. கிராமப்புறங்களின் வளர்ச்சிக்கான இத்திட்டம், 150நாட்கள் வேலைவாய்ப்புத் திட்டமாக உயர்த்தப்படும்.

5. அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டம்: மகளிருக்கு ரூ.25,000 மானியத்துடன், 5 லட்சம் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கப்படும்.

ஆகிய 5 வாக்குறுதிகளை எடப்பாடி பழனிசாமி அறிவித்தார்.

**செய்திகள்**
**உடனுக்குடன் படிக்க**
**தினத்தளம்**
DHINATH DHALAM
**வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்**
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# வேலூர் சிஎம்சி மருத்துவர் வீட்டில் போதைப்பொருள் பறிமுதல்



வேலூர்: வேலூர் சிஎம்சி டாக்டர் வீட்டில் அமலாக்கத் துறை அதிகாரிகள் நடத்திய சோதனையில் மெத்தப்பட்டமைன், கஞ்சா போதை பொருளை பறிமுதல் செய்தனர்.

இது தொடர்பாக புகார் அளிக்க காவல் நிலையம், போதைபொருள் தடுப்புநுண்ணறிவுபிரிவு என அமலாக்கத் துறையினர் மாறி மாறி அலைந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வேலூர் தோட்டப்பாளையம் பிள்ளையார் கோயில் தெருவில் சிஎம்சி மருத்துவர்களுக்கான அடுக்குமாடி குடியிருப்பு அமைந்துள்ளது. இங்கு, மருத்துவர் பிளிங்கின் என்பவர் தங்கியுள்ளார். இவர், கடந்த மூன்று ஆண்டுகளாக சிஎம்சிஅவசரசிகிச்சைப் பிரிவில் மருத்துவராகப் பணியாற்றி வருகிறார். மருத்துவர் பிளிங்கின் கேரள மாதிலத்தைச் சேர்ந்தவர் என்றும் தற்போது விடுமுறையில் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதற்கிடையில், இவரது குடியிருப்பில் அமலாக்கத் துறை அதிகாரிகள் குழுவினர் துப்பாக்கி ஏந்திய சி.ஆர்.பி.எப் வீரர்கள் பாதுகாப்புடன் நேற்று சோதனை நடத்த முயன்றனர். அவர் வீட்டில் இல்லாத நிலையில் அவர் வருவதற்காக நீண்ட நேரம் காத்திருந்தனர். ஆனால், அவர் குடியிருப்புக்கு திரும்பாமல் திடீரென தலைமறைவானார்.

இதையடுத்து, அருகில் வசிக்கும் மருத்துவர்கள் உதவியுடன் பிளிங்கின் வீட்டின்பூட்டைஉடைத்து உள்ளே சென்ற அதிகாரிகள் சோதனை நடத்தினர். நள்ளிரவு வரை நடந்த சோதனையில் 10 கிராம் மெத்தப்பட்டமைன், 100 கிராம் கஞ்சாவை பறிமுதல் செய்ததாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், பறிமுதல் செய்யப்பட்ட போதைப் பொருளை தோட்டப்பாளையம் பகுதிக்கு உட்பட்ட வேலூர் காவல் நிலையத்தில் ஒப்படைக்க அமலாக்கப்பிரிவு போலீஸார் சென்றனர். அங்கு புகாரைப்பெறமறுத்தபோலீஸார், தங்களுக்கு தொடர்பில்லாத சோதனையில் பறிமுதல் செய்யப்பட்ட போதைப் பொருள் குறித்து வழக்குப்பதிவு செய்ய முடியாது என்றும் போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவு போலீஸ் பிரிவில் (என்.ஐ.பி) ஒப்படைக்கும்படியும் கூறி அனுப்பி வைத்தனர்.





# சிவாஜி காலனி குடியிருப்போர் நலச் சங்கம் சார்பாக சமத்துவ பொங்கல் விழா

கோவை தடாகம் சாலை சிவாஜி காலனி பகுதியில்சிவாஜி காலனி குடியிருப்போர் நலச் சங்கம் சார்பாக ஆண்டு தோறும் பொங்கல் விழா கொண்டாட படுவது வழக்கம். இந்த நிலையில் இந்த ஆண்டு அனைத்து பகுதி பொதுமக்களும் கலந்து கொண்டு கொண்டாடும் ஒரு விழாவாக சமத்துவ பொங்கல் விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராக 34வது வார்டு கவுன்சிலர் மாலதி முன்னிலை வகித்தார்.

சிவாஜி காலனி குடியிருப்போர் நலச் சங்க தலைவர் லயன் டாக்டர் நடராஜன் தலைமை தாங்கினார். இதில் சிவாஜி காலனி, சிவாஜி காலனி விரிவாக்கம் உள்ளிட்ட பகுதியை சேர்ந்த பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டு பொங்கல் வைத்து, மகிழ்ச்சி அடைந்தனர்.

இதனை தொடர்ந்து கவுன்சிலர்மாலதி அப்பகுதி பொதுமக்களுக்கு பொங்கல் சிறப்பு பரிசுகளை வழங்கினார்.இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட அனைத்து சமூக மக்களுக்கும் உதவும் பேரவை அமைப்பின் நிறுவன தலைவரும், சமூக ஆர்வலரும் வழக்கறிஞருமான புஸ்பாணந்தம் கலந்து கொண்டு சிறப்பான முறையில் சமத்துவ பொங்கல் வைத்த மகளீர் களுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்தார்.

இந்த சமத்துவ பொங்கல் விழா நிகழ்ச்சியில் சிவாஜி காலனி குடியிருப்போர் நலச் சங்க நிர்வாகிகள், ஆனந்தன், கேசவன், ஈஸ்வரன், ரமேஷ் பாபு, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு விழாவினை உற்ச்சாகமாக நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கோவை ப்ரூக் பீல்ட்ஸ் மாலில் 'டக்அவுட்' எனும் ஸ்போர்ட்ஸ் மற்றும் என்டர்டெயின்மென்ட் மையம் துவக்க விழா நிகழ்ச்சி





சென்னையை அடுத்து கோவையில் முதல்முறையாக டக்அவுட் விளையாட்டு மையம் புரூக் பீல்ட்ஸ் வளாகத்தில் துவங்கப்பட்டது..

தமிழ்நாட்டின் முன்னணி விளையாட்டு மற்றும் இன்டோர் பொழுதுபோக்கு நிறுவனமான டக்அவுட் ஸ்போர்ட்ஸ் மற்றும் என்டர்டெயின்மென்ட், தனது 8-வது மையத்தை கோயம்புத்தூரில் உள்ள ப்ரூக்ஃபீல்ட்ஸ் மாலில் துவக்கியது...

புரூக்பீல்ட்ஸ் நான்காவது தளத்தில் தி சினிமாஸ் எதிர்புறம் துவங்கி உள்ள டக்அவுட் விளையாட்டு மைய துவக்க விழாவில் சிறப்பு விருந்தினராக கேம்ஃபோர்டு சர்வதேச பள்ளியின் தாளாளர் அருள் ரமேஷ் கலந்து கொண்டு புதிய மையத்தை திறந்து வைத்தார்..

டக்அவுட்விளையாட்டு மையத்தின் சிறப்புகள் குறித்துடக்அவுட்நிறுவனர் பிரசாந்த் மற்றும் பங்குதாதர்கள் அனிருத் கண்ணன் ,பத்ரி நாராயணன், ஹைசைனுதீன் ஆகியோர் கூறுகையில்,

கோவையில் முதல் முறையாக மிகப் பெரிய நியான்-குளோ இன்ஃப்ளேடபிள் பார்க் ஆக டக் அவுட் துவங்கப்பட்டுள்ளதாகவும்,குறிப்பாக முழுமையான நியான் ஒளி அலங்காரத்துடன் அமைக்கப்பட்டுள்ள இந்த இன்டோர் விளையாட்டு பூங்கா, குளோ-இன்-தி-டார்க் அனுபவத்தை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்..

நிஞ்ஜா கோர்ஸ், நீளமான ஸ்லைட்கள், இன்ஃப்ளேடபிள் ராக் கிளைம்பிங், சர்ஃபிங் ஸோன், ஸ்பைடர் வால் சவால்கள், ஃபோம் பிட், பால் பிட் மற்றும் பல்வேறு தடையமைப்பு விளையாட்டுகள் இதில் முக்கிய அம்சங்களாக இடம்பெற்றுள்ளன.

உடற்பயிற்சியையும் உற்சாகமான பொழுதுபோக்கையும் ஒருங்கிணைக்கும் இந்த நவீன வசதி, 3 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட குழந்தைகள், குடும்பங்கள் மற்றும் நண்பர் குழுக்களுக்கு சிறந்த பொழுதுபோக்கு தளமாக அமைகிறது. நியான்-குளோ கருத்தாக்கம், பாரம்பரிய இன்ஃப்ளேடபிள்விளையாட்டுகளை புதிய காட்சி அனுபவமாக மாற்றும் என நம்பிக்கை தெரிவித்தனர்.

# தூத்துக்குடி பாரதிய ஜனதா கட்சி சார்பில் பொங்கல் கோலப்போட்டி



தூத்துக்குடி 30வது வார்டு டூவிபுரத்தில் பாரதிய ஜனதா கட்சி சார்பில் பொங்கல் கோலப்போட்டி நடைபெற்றது. விழாவிற்கு பா.ஜ.க. மாவட்ட துணைத்தலைவர் சண்முகசுந்தரம் தலைமை வகித்தார்.அதிமுகவர்த்தக அணி மாநில செயலாளர் முன்னாள் அமைச்சர் சி.த.செல்லபப்பாண்டியன், பா.ஜ.க. ஆன்மிகப்பிரிவு இணை அமைப்பாளர் உஷா தேவி ஆகியோர் கோலப்போட்டியில் வென்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினர். நிகழ்ச்சியில் தொழிலதிபர் எஸ்.கே.ஆர்.தனசேகரன், வேலுச்சாமி, கார்த்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர். பொங்கல் கோலப்போட்டி ஏற்பாடுகளை 30வது வார்டு பா.ஜ.க. பிரமுகர் நடிகர் காசிலிங்கம் செய்திருந்தார்.



### மருத்துவத்துறையில் 50 ஆண்டு கால மகத்தான மக்கள் சேவை ஆற்றிய

# ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனைக்கு துணை ஜனாதிபதி சி.பி.இராதாகிருஷ்ணன் பாராட்டு

கோவை, எஸ்.என். ஆர்., சன்ஸ் அறக்கட்டளையின் கீழ், கோவை ஆவாரம்பாளையத்தில் செயல்பட்டு வரும் ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனையின் 50 ஆவது ஆண்டு பொன்விழா மற்றும் நவ இந்தியாவில் செயல்பட்டு வரும் ஸ்ரீ ராமகிருஷ்ணா பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் 25 ஆவது ஆண்டு வெள்ளிவிழா, கோவை அவிநாசி சாலையில் உள்ள கொடிசியா வர்த்தக மையத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் டாக்டர் சுந்தர் ராமகிருஷ்ணன் தலைமை வகித்து, வரவேற்புரை பேசினார். பிரியங்கா சுந்தர், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட இந்திய துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் க்கு வரவேற்பு அளித்தார்.

அதைத்தொடர்ந்து இந்திய துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன், ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனை மற்றும் ஸ்ரீ ராமகிருஷ்ணா பல் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையின் இலச்சினையை வெளியிட்டார். சிறப்பாகப் பணிபுரிந்து வரும் மருத்துவர்கள் மற்றும் அலுவலர்களுக்கு விருதுகள் வழங்கி சிறப்புரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது: 1975 ஆம் ஆண்டில் ஆரம்பித்த ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனை இன்று பொன்விழா கண்டுள்ளது. உண்மையிலேயே நம் கோவை மண்ணிற்கு மகுடம் சூட்டியதாக இதனை நான் பார்க்கின்றேன்.

கோவை மாவட்டத்தில் 50 ஆண்டுகள் நிறைவு செய்த ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனை மற்றும் 25 ஆண்டுகள் நிறைவு செய்த ஸ்ரீ ராமகிருஷ்ணா பல் மருத்துவமனை மற்றும் கல்லூரி புதிய மைல் கல்லை எட்டியுள்ளது. இதற்கு தரமான மருத்துவர்கள், தாயுள்ளத்தோடு கவனித்துக் கொள்ளும் செவிலியர்களின் பங்கு அளப்பரியது. ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனை மருத்துவச் சுற்றுலாவைத் தொடங்கி வைத்து, அதை செயல்படுத்திய பாராட்டுக்குரியது என தெரிவித்தார் விழாவில், எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளையின் அறங்காவலர் லக்ஷ்மி நாராயணஸ்வாமி, அறக்கட்டளையின் தலைமை செயல் அதிகாரி சி.வி. ராம்குமார், தலைமை நிர்வாக அதிகாரி டி. மகேஷ் குமார், மற்றும் ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனையின் மருத்துவ இயக்குனர் டாக்டர் ராஜகோபால், மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் எஸ். அழகப்பன் மற்றும் ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்வி நிறுவன முதல்வர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அரசியல் தலைவர்கள், அரசு அதிகாரிகள் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்

### தமிழ்நாடு திருவள்ளுவர் மக்கள் கூட்டமைப்பு மற்றும் கோவை மாவட்ட வள்ளுவர் குல மக்கள் இணைந்து நடத்திய

# ஒற்றுமை திருவிழா திருவள்ளுவர் தினம் நிகழ்ச்சியில் பொங்கல் வைத்து வழிபாடு



கோவை தடாகம் சாலை,சுண்டபாளையம் சாலையில் அமைந்துள்ள சக்தி முத்து மாரியம்மன் திருக்கோவில் வளாகத்தில், தமிழ்நாடு திருவள்ளுவர் மக்கள் கூட்டமைப்பு மற்றும் கோவை மாவட்ட வள்ளுவர் குல மக்கள் இணைந்து நடத்தும் 2026ம் ஆண்டுக்கான திருவள்ளுவர் தினம் பொங்கல் விழா சீறும் சிறப்புமாக நடைபெற்றது.இதில் ஜோதிடர் முருகானந்தம் வெள்ளிங்கிரி தலைமையில்

சிறப்பு விருந்தினராக தமிழ் அமுதம் புலவர் புலியகுளம் அய்யாச்சாமி கலந்து கொண்டு, திருவள்ளுவர் திருஉருவ படத்திற்க்கு சிறப்பு பூஜைகள் செய்து வழிபாடு நடத்தினார். இந்த நிகழ்ச்சியில் சபா.கார்த்திகேயன் வரவேற்புரையாற்றினார். தொடர்ந்து பொதுமக்கள் முன்னிலையில் பொங்கல் வைத்து திருவள்ளுவருக்கு படையலிட்டு, பூஜைகள் செய்து வழிபட்டனர். மேலும் இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய தமிழ்நாடு திருவள்ளுவர் மக்கள் கூட்டமைப்பின் மாநில தலைவர் அருண் கோபால் கூறியதாவது.. வான் புகழ் கொண்ட ஐய்யன் திருவள்ளுவர் அவதரித்த நாள் இன்று எனவும், இதனை திருவள்ளுவர்தினமாகநாடு முழுவதும் கடைபிடித்து வருவதாகவும், இந்த நாளில் எங்களது அமைப்பு சார்பாக ஆண்டு தோறும் சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்த படுவது வழக்கம்.அதன் ஒரு பகுதியாக இந்த ஆண்டும், பொங்கல் வைத்து ஐய்யன் திருவள்ளுவருக்கு சிறப்பு பூஜைகள் செய்து, சாலையில் செல்லும் பொதுமக்களுக்கு இந்த நாளின் மகத்துவத்தை எடுத்து கூறி இனிப்புகள் வழங்குவதாக தெரிவித்தார். மேலும் தமிழக அரசு திருக்குறளை தேசியநூலாக அறிவிக்க வேண்டும் என்றும், கோவை காந்தி பார்க், பகுதியில் அய்யன் திருவள்ளுவருக்கு ஒரு சிலை அமைக்க வேண்டும் எனவும்,கோரிக்கை வைக்கப்பட்டது. மேலும் நிகழ்ச்சியில் பள்ளி குழந்தைகளுக்கு திருக்குறள் புத்தகங்கள்,கல்வி உதவி நல திட்டங்கள் வழங்கப்பட உள்ளது எனவும் கூறினார். இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கார்த்திகேயன், சிவக்குமார் செய்திருந்தனர். மேலும் நிர்வாகிகள் இளங்கோ, கிருஷ்ணகுமார், முத்தழகன், ப்ரஸ் முருகன், ப்ரஸ் ராஜன், ஜெயராஜ், தமிழரசு,ஸ்ரீராம்,பாலன், வடிவேல்,காமேஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சென்னை பரங்கிமலை ஆயுதப்படை மைதானத்தில் பொங்கல் விழா



சென்னை பரங்கிமலை ஆயுதப்படை காவலர் மைதானத்தில் பொங்கல் சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது

இதில் ஆயுதப்படை பிரிவும் மத்திய குற்ற பிரிவு மற்றும் நுண்ணறிவு பிரிவுகள்சேர்ந்து பொங்கல் விழா கொண்டாடினர்

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக சென்னை மாநகராட்சி கமிஷனர் அருண் கலந்து கொண்டு தூய்மை பணியாளர்களுக்கு பொங்கல் தொகுப்பு வழங்கினார்

பின்னர் மேடையில் பேசிய சென்னை மாநகர கமிஷனர்அருண் இவ்வாறு கூறினார்

சென்னை புறநகர் காவல் துறை பொறுத்தவரைக்கும் ஒவ்வொரு ஆண்டும் தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையை சிறப்பாக கொண்டாடுவது வழக்கம்

காவல்துறையில் நிறைய பிரிவுகள் இருக்கின்றது சட்டம் ஒழுங்கு போக்குவரத்து ஆயுதப்படை மத்திய குற்றப்பிரிவு புலனாய்வு பிரிவு என நிறைய பிரிவுகள் உள்ளது

இந்த பிரிவுகள் பொருத்தவரையில் ஆயுதப்படைபிரிவும்மத்திய குற்ற பிரிவு மற்றும் நுண்ணறிவு பிரிவுகள் சேர்ந்து இன்று பொங்கல் விழா கொண்டாடிக் கொண்டு இருக்கிறீர்கள்

ரொம்ப மகிழ்ச்சியா இருக்கின்றது எல்லா ஏற்பாடுகளும் மிகவும் சிறப்பாக உள்ளது அனைவருக்கும் என்னுடைய பொங்கல் நல்வாழ்த்துக்கள் அதேபோல் இங்கு வந்திருக்கக்கூடிய ஊடகத்துறை மற்றும் பத்திரிக்கை துறை நண்பர்களுக்கும் என்னுடைய பொங்கல் திருநாள் நல்வாழ்த்துக்கள் காவல் பணி என்பது சிறிது கடினமான பணி என்பது அனைவருக்கும் தெரியும்

மற்ற பணியாளர்கள் போல் விடுமுறை காலங்களில் ஓய்வு எடுக்க முடியாத ஒரு பணி கடந்த சில வாரங்களாக பார்த்தீர்கள் என்றால் உங்களுக்கு தெரியும் எவ்வளவு ஆர்ப்பாட்டம் போராட்டம் நடைபெற்று இருக்கிறது பல்வேறு சங்கங்கள்கூட்டமைப்புகள் அரசியல் கட்சிகள் எல்லோரும் சேர்ந்து ஏதாவது ஒரு ஆர்ப்பாட்டம் அல்லதுபோராட்டம்செய்து கொண்டிருப்பார்கள்

அவர்களுடைய கோரிக்கையும் நியாயமாக இருக்கும் என்னதான் இருந்தாலும் அந்த போராட்டங்கள் பண்ணும் போது அதை கையாள்வது என்பது காவல்துறையின் வேலை

குறிப்பாக இந்த ஆயுதப்படைபிரிவைசார்ந்த ஆழிநர்கள் பெண் காவலராக இருந்தாலும் சரி ஆண் காவலராக இருந்தாலும் சரி அவர்களுடைய பணி மிகவும் சவாலான பணி

இப்பொழுதுஒருஇரண்டு நாட்களுக்கு முன் பார்த்திங்கள் என்றால் ஆசிரியர்கள் செவிலியர்கள் தூய்மை பணியாளர்கள் என சுமார் 4500 பேரை நாம் கைது செய்து வைத்துள்ளோம்

பொதுமக்களை நாம் கையாளும் பொழுது மிகவும்கவனமாககையாள வேண்டும் கடந்த இந்த

ஒரு வருடங்களாக பார்க்கும் பொழுது ஆயுதப்படை ஆயுதப்படை காவலர்கள் பெண் காவலர்கள் குறிப்பாக இந்த பணியை மிகவும் சிறப்பாக செய்து வருகிறார்கள் இது ஒரு சாதாரண பணி அல்ல ஒவ்வொருவரும் அவர்களுடைய உரிமைகளைக் கேட்டு வரும் பொழுது அவர்கள் எமோஷன் எந்த ஒரு துறையும் இல்லாமல் இந்த வருடம் ஆயுதபடியுடைய பணி சிறப்பாக இருந்தது எனக்கு வாய்ப்பளித்த அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன் என கூறினார்

### ஆலங்குளம்

# ஐன்ஸ்டீன் தொழில்நுட்ப கல்லூரியில் பொங்கல் விழா

இளமை ததும்பும் மாணவர் பருவத்தில், என்றும் நினைவில் நிற்பது கொண்டாட்டங்கள். ஐன்ஸ்டீன் கல்லூரியில் முன்னதாகவே கொண்டாடி மகிழ்ந்தோம். மாணவர்கள் ஒருங்கிணைப்பில் உணவுத் திருவிழா, கிராமிய விளையாட்டுகள், செண்டா மேளம் முழங்க ஆர்ப்பரித்தனர் மாணவர்கள்.பேச்சுப்போட்டி,பட்டிமன்றம்,சிலம்பம் என மாணவர்களின் திறனுக்கு வடிகாலாகபொங்கல்



அமைந்தது. மூன்று பானைகளில் பொங்கலிட்டு 2026 ஆம் ஆண்டைக் கொண்டாட்டங்களோடு துவங்கினர் ஐன்ஸ்டீன் கல்லூரி மாணவர்கள். மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களுடன் இணைந்து சர்க்கரைப் பொங்கல் உண்டுமகிழ்ந்தோம்.

நல்லூரில் இயங்கும் வில்பவர் – மோபவர் – குவாட் நிறுவன ஊழியர்களுடன் ஒருங்கிணைந்து இந்த ஆண்டு பொங்கலைத் தடபுடலாகக் கொண்டாடி மகிழ்ந்தோம். தனி நபர் மற்றும் குழு என அனைவருக்குமாக 20 விதவிதமான விளையாட்டுகளில் ஊழியர்கள் ஆர்வமாகப் போட்டியிட்டுப் பரிசுகளை அள்ளினர். அனைவருக்கும் கடிக்க கரும்பு,சர்க்கரைப் பொங்கல், மெதுவடை மற்றும் தேநீர் என விருந்தோம்பலிட்டு மகிழ்ந்தோம். இந்த ஆண்டு ஊழியர்களின் மழலைகள் மட்டுமே சுமார் 125 பேர்கள் கலந்து கொண்டது கூடுதல் மகிழ்ச்சி.

பொங்க இல்லப் பொங்கல் !

கடந்த ஆண்டு நல்லூரில் குடியேறிய 'எழில் குடில்' இல்லத்தில் பொங்கலிட்டு மகிழ்ந்தோம். வீட்டைச் சுற்றிக் கரும்பைக் கட்டி, வண்ணக் கோலமிட்டு மெருகேற்றினோம். மேலும், இல்லப் பொங்கலில் நல்லூர் உறவுகளான கழக உறுப்பினர்கள் திரளாக இல்லத்திற்கு வருகை தந்து அன்பைப் பொழிந்து வாழ்த்தி மகிழ்வித்தனர்.

பொங்கல்!

திமுககொடியேற்றம்பொங்கல்திருவிழாநிறைவாக ஆலங்குளம் நகரத் திமுக சார்பாக ஊர்வலமாகச் சென்று, நகரின் மையப்பகுதிகளில், பல இடங்களில் இருவண்ணக் கொடியேற்றிக் கொண்டாடினோம். மக்களின் ஏகோபித்த வரவேற்பைப் பார்க்கவே மகிழ்ச்சியாக இருந்தது. கலைஞர் போல வேடமேற்ற கழகத் தொண்டர் வந்தது, 2026 ஆம் ஆண்டிலும் கழக ஆட்சி தொடரும் ,என உணர வைத்தது.

பொங்கல் ஐந்து கிராமியப் பொங்கல்!

கிராமத்தில் காலையில் இல்லத்தில் பொங்கலிட்டு, பூசை செய்து இயற்கையை வணங்குவது, வழக்கம். மதியத்திற்கு மேல் கிராமத்து இளைஞர்கள் ஒன்றுகூடி, பொங்கல் விளையாட்டுகளைத் தனித்துவமாக நடத்துவர். சிறுவர், சிறுமியர், இளைஞர், நடுவயதினர் மற்றும் முதியோருக்கு, எனக் கிராமமே களைகட்டி கொண்டாடி மகிழ்வர். நல்லூர் ஊராட்சியில் காசியாபுரம், சிவகாமியாபுரம் ஆகிய இரண்டு கிராமங்களில் நடந்த பொங்கல் விளையாட்டில் .

தமிழர் திருவிழா, தமிழ் மக்களின் பெருவிழா" என்பதை ஐந்து இடங்களில் கொண்டாடிய பொங்கல் விழாநடந்து.




## தூத்துக்குடி

# அண்ணாநகர் பகுதி 30வது வட்ட திமுக மற்றும் டூவிபுரம் இளைஞரணி நடத்தும் 23ஆம் ஆண்டு பொங்கல் விழா





தமிழர் திருநாளாம் பொங்கல் விழாவை முன்னிட்டு தூத்துக்குடி அண்ணாநகர் பகுதி 30வது வட்ட திமுக மற்றும் டூவிபுரம் இளைஞரணி நடத்தும் 23ஆம் ஆண்டு பொங்கல் விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. விழாவில் சிறுவர்கள், பெண்கள், முதியவர்களுக்கு விளையாட்டு போட்டி நடைபெற்றது.

இதில் அனைத்து பகுதிகளிலும் ஏராளமான சிறுவர்கள் பெண்கள் மற்றும் பொதுமக்கள் போட்டியில் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் வடக்கு மாவட்ட தி.மு.க செயலாளரும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் மற்றும் மேயர் ஜெகன் பெரியசாமி ஆகியோர் கலந்து கொண்டு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சேலை, வேஷ்டி, பரிசுகளை வழங்கினார்.

விழா நிகழ்ச்சி ஏற்பாடு அண்ணாநகர் பகுதி செயலாளர் ரவீந்திரன் செய்திருந்தார். 30வது வட்ட திமுக செயலாளர் செந்தில்குமார் நன்றியுரையாற்றினர்.

நிகழ்ச்சியில், மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன், மாவட்டத் துணைச் செயலாளர் ராஜ்மோகன் செல்வின், துணைமேயர் ஜெனிட்டா செல்வராஜ், மேற்கு மண்டல தலைவர் அன்னலட்சுமி, மாநில பேச்சாளர் சரத்பாலா, மாவட்ட அயலக அணி அமைப்பாளர் அசோக், மாநகர துணை செயலாளர் கனகராஜ், மாநகர தொழிலாளர் அணி அமைப்பாளர் முருகஇசக்கி, மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் சங்கரநாராயணன், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் கோகுல்நாத், 30வது வார்டு மாமன்ற உறுப்பினர் அதிர்ஷ்டமணி ராஜேந்திரன், அவைத் தலைவர் ராஜ்மோகன், வட்ட பிரதிநிதி கார்த்திகேயன், அந்தோணி ராஜ், நாராயணன், சுப்பிரமணியன், கணேசன், 30-வது வட்ட திமுக அன்பழகன், சீனிவாசன், செல்வராஜ், சின்ராஜ், அன்னராஜன், டேனியல், ஜெயராமன், ரவிக்குமார், சத்தியநாராயணன், ராஜ் நாராயணன், பொருளாளர் தங்ககுமார் மற்றும் கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



### தூத்துக்குடி 19வது வட்ட திமுக இரண்டாம் ஆண்டு சார்பில்

# தமிழ் புத்தாண்டு மற்றும் பொங்கல் விளையாட்டு விழாவில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

தமிழர் திருநாளாம் பொங்கல் விழாவை முன்னிட்டு தூத்துக்குடி மகிழ்ச்சி புரம் விநாயகர் கோவில் அருகில் 19வது வட்ட திமுக இரண்டாம் ஆண்டு சார்பில் தமிழ் புத்தாண்டு மற்றும் பொங்கல் விளையாட்டு விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

விழாவில் சிறுவர்கள், பெண்கள், முதியவர்களுக்கு விளையாட்டு போட்டி நடைபெற்றது. இதில் அனைத்து பகுதிகளிலும் ஏராளமான சிறுவர்கள் பெண்கள் மற்றும் பொதுமக்கள் போட்டியில் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சியில் வடக்கு மாவட்ட தி.மு.க செயலாளரும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் தலைமையில் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் பரிசுகளை வழங்கினார்.

விழா நிகழ்ச்சி ஏற்பாடு மாநகர திமுக இளைஞரணி துணை செயலாளர் சிவக்குமார் செல்வின் மற்றும் 19வது வார்டு மாமன்ற உறுப்பினர் சோமசுந்தரி செய்திருந்தார்கள். மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் சங்கரநாராயணன் வரவேற்புரையாற்றினார். 19வது வார்டு செயலாளர் பத்மாவதி நன்றியுரையாற்றினார்.

நிகழ்ச்சியில், மாநகர திமுக செயலாளர் ஆனந்த சேகரன், துணை மேயர் ஜெனிட்டா செல்வராஜ், மேற்கு மண்டல தலைவர் அன்னலட்சுமி, மாவட்ட அயலக அணி அமைப்பாளர் அசோக், தெற்கு மண்டலதலைவர் பாலகுருசாமி, கிழக்கு மண்டல தலைவர் கலைச்செல்வி, மேற்கு மண்டல தலைவர் அன்னலட்சுமி, மாநகர துணை செயலாளர் கனகராஜ், மாவட்ட தொழிலாளர் அமைப்பாளர் முருகஇசக்கி, மாநகர இளைஞரணி அமைப்பாளர் அருண் சுந்தர், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜோசப், மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் பிரவீன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் டினோ, மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் முகமது, மாநகர மாணவரணி துணை அமைப்பாளர் கோகுல், மாமன்ற உறுப்பினர்கள் கந்தசாமி, அதிர்ஷ்ட லட்சுமி, விஜயலட்சுமி, கண்ணன், ராமர், ஸ்ரீனிவாசன், பொன்னப்பன், 19 வார்டு நிர்வாகிகள் லோகநாதன், அமிர்தலிங்கம், சுடலைமணி ராஜா, பாண்டி, தர்மர், மாரிமுத்து, சீனி முகமது, பாலன், பாஸ்கர், ஹரிராம், சந்திரமோகன், திருமலைகுமார், கோமு, கண்ணன், பரமசிவன், கோட்டை மணி, ராஜசேகர், ராஜன், கண்ணன், முருகன், வெங்கடேஷ், முருகன், பிரபாகரன், மார்க்கின் ராபர்ட், ராஜன், ஜெயகணேஷ், ராஜேஷ், முருகேஷ், முத்துராம்குமார், சின்னத்துரை, சதீஷ், சக்தி, ஹரி விக்னேஷ், குமார், அருள், யோகேஷ், தேவஆனந்த், வேக்முகமது, தனலட்சுமி, பத்மா, பாரதி மற்றும் கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



கோவை மாவட்டம் இராமநாதபுரம் பகுதியில், சில்க் வில்லேஜ் கைத்தறி ஆராய்ச்சி மையம் செயல்பட்டு வருகின்றது. அழிந்துவருகின்றகைத்தறிநெசவாளர்களின் வாழ்வை மீட்கும் வகையில் இம்மையம் செயல்படுவதன், கைத்தறி நெசவு முறைகள் குறித்து பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு பயிற்சிகளும் வழங்கி வருகின்றது. இந்த நிலையில் இம்மையத்தில், பொங்கல் விழா நிகழ்ச்சி நடைபெற்றது. பாரம்பரிய முறைப்படி நடைபெற்ற இதில், கல்லூரி மாணவ மாணவியர்கள் பொங்கல் வைத்து, தமிழர்களின் பாரம்பரிய குலவை சத்தமிட்டு, ஆடிப்பாடி கொண்டாடி, சூரிய பகவானுக்கு பொங்கல் வைத்து வழிபாடு நடத்தி மகிழ்ந்தனர். தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் மியூசிக்கல் சேர், கயிறு இழுத்தல், உரி அடித்தல், உள்ளிட்ட தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களை மாணவ மாணவியர்கள் விளையாடி மகிழ்ந்தனர். இந்நிகழ்ச்சியில் சில்க் வில்லேஜ் நிறுவனத்தின் நிறுவனர் கைத்தறி முருகேசன், பழனிவேல், ஆலோசகர் ராஜாராம் ஆசிரியர்கள், ஊழியர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மாணவ மாணவர்களின் பொங்கல் விழாவினை ரசித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வைகை அணையில் கலை பண்பாட்டு துறை, சுற்றுலா துறை சார்பாக பொங்கல் கலை நிகழ்ச்சி விழா



தேனி மாவட்டம் வைகை அணையில் சிறுவர் பூங்காவில் கலை பண்பாட்டுத்துறை மற்றும் சுற்றுலாத்துறை சார்பாக பொங்கல் கலை நிகழ்ச்சி விழா நடைபெற்றது இந்த கலை நிகழ்ச்சியில் தப்பாட்டம் தேவர் ஆட்டம்

கரகாட்டம் நையாண்டி மேளம்...

மாடு ஆட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகளை தேனி மாவட்டத்தில் உள்ள ஊர்களில் இருந்து வைகை அணைக்கு வந்த சுற்றுலா பயணிகள் இந்த இந்த நிகழ்ச்சியினை கண்டுகளித்தனர் இந்நிகழ்வில் ஆண்கள் பெண்கள் குழந்தைகள் பெரியவர்கள் சிறுவர் ... சிறுமியர்கள் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கண்டு ரசித்து மகிழ்ந்தனர்..

இந்த நிகழ்ச்சியை நீர்வள துறை உதவி செயற்பொறியாளர் அலுவலக அதிகாரிகள் தேனி கலை பண்பாட்டு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அலுவலக ஊழியர்கள் சர்வர் மன்ற திட்ட அலுவலர் சுகுமார் ஓவியர் ஆசிரியர் ஜோசப் சுற்றுலாத்துறை அலுவலர் பாஸ்கர் மற்றும் அரசு ஊழியர்கள் பணியாளர்கள் கலந்து கொண்டனர் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் கலை பண்பாட்டு துறை அலுவலர்தேனி தனுஷ்கோடி இந்தவிழாவினை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

# வேப்பூர் சாய் அப்போலோ நர்சிங் கல்லூரியில் சமத்துவ பொங்கல் விழா கோலாகலம்



கடலூர் மாவட்டம் வேப்பூர்சாய்அப்போலோ நர்சிங் கல்லூரி வளாகத்தில், வேப்பூர் பிரைடு லயன்ஸ் கிளப் மற்றும் சாய் அப்போலோ நர்சிங் கல்லூரி ஆகியவை இணைந்து நடத்திய சமத்துவ பொங்கல் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. தமிழர்களின் பாரம்பரியப் பண்டிகையான பொங்கல் திருநாளை முன்னிட்டு நடைபெற்ற இவ்விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் கல்லூரி முதல்வர் அன்பரசி இன்முகத்தோடு வரவேற்றார்.

இவ்விழாவானது அரிமா சங்கத் தலைவர் சபிபுல்லா, செயலாளர் கோல்டன் ஜெயக்குமார், பொருளாளர் டாக்டர் ஏ.ஆர். தங்கதுரை மற்றும் இ-பைக் அரிமா விக்னேஷ் ஆகியோர் தலைமையில் எழுச்சியுடன் நடைபெற்றது. சாய் அப்போலோ கல்வி நிறுவனங்களின் முதன்மை கல்வி அலுவலர் ஆனந்த ஜோதி, கல்வி முதல்வர்கள் சுஷ்மிதா, கனிமொழி மற்றும் பிரியதர்ஷினி ஆகியோர் முன்னிலை வகித்து விழாவினை சிறப்பித்தனர். சிறப்பு விருந்தினர்களாக சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் கலைச்செல்வம் சின்னதுரை மற்றும் புனித தேவக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு, மாணவர்களிடையே பொங்கல் பண்டிகையின் முக்கியத்துவம் மற்றும் பண்பாட்டு விழுமியங்கள் குறித்து உரையாற்றினர். விழாவின் முக்கிய நிகழ்வாக, கல்லூரி மாணவ - மாணவிகளின் கண்கவர் பாரம்பரியகலைநிகழ்ச்சிகள் மற்றும் கிராமிய நடனநிகழ்ச்சிகள் நடைபெற்றன. வண்ணக்கோலமிட்டு,புதுப்பானையில் பொங்கலிட்டு, அது பொங்கி வரும் வேளையில்"பொங்கலோபொங்கல்" என மாணவர்கள் உற்சாக முழக்கமிட்டு சூரியபகவானுக்குநன்றி செலுத்தினர்.

தொடர்ந்து, விழாவில் பங்கேற்ற மாணவிகள் மற்றும் சிறப்பாகப் பணியாற்றிய விரிவுரையாளர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் சிறப்புப் பரிசுகள் வழங்கப்பட்டன. இவ்விழாவில் கல்லூரி விரிவுரையாளர்கள் நளினி, சிவரஞ்சனி, தீபா, ராதா, சௌந்தர்யா மற்றும் திவ்யா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விழாவின் நிறைவாக, கல்லூரி ஒருங்கிணைப்பாளர் சண்முகப்பிரியாஅனைவருக்கும் நன்றி கூறினார். தமிழ்ப் பண்பாட்டைப் பறைசாற்றும் வகையில் அமைந்த இந்த சமத்துவ பொங்கல் விழா மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே நெகிழ்ச்சியையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியது.

# மதுரையில் நாம் தமிழர் கட்சி சார்பில் திருவள்ளுவர், தமிழன்னை, பென்னிகுயிக் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை



ஆட்சியர் அலுவலகம் அருகே உள்ள திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு திருவுருவ சிலைக்கு நாம் தமிழர் கட்சி வடக்கு மண்டலம் சார்பில் மாநில கொள்கைப் பரப்புச்செயலாளர் அருண் ஜெயசீலன் திருவுருவச்சிலைக்குமாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

நிகழ்ச்சியில் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் வடக்கு மண்டல பொறுப்பாளர் சோமசுந்தரம், வடக்குத்தொகுதிவேட்பாளர் திருநாவுக்கரசு, வடக்கு மாநில ஒருங்கிணைப்பாளர்-ஜெயக்கொடி சிவகுமார், தெற்கு மாநில ஒருங்கிணைப்பாளர்

கண்ணன், மத்திய தொகுதி வேட்பாளர்இனியவன்.ஹக்கீம்,கிழக்குசட்டமன்றத் தொகுதி, மேலூர் சட்டமன்றத்தொகுதி இராம. கோட்டை குமார்,கிழக்கு சட்டமன்ற த்தொகுதி செல்வம்,மேற்குசட்டமன்ற தொகுதி நாகலட்சுமி திருமாறன், வேட்பாளர் விக்னேஷ் திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதி,முனைவர், மோ.சத்யா தேவி, உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு திருவள்ளுவர் திருவுருவச் சிலைக்கு மரியாதை செலுத்தினர். நிகழ்ச்சிகளை தொடர்ந்து தல்லாகுளம் பகுதியிலுள்ள தமிழன்னை திருவுருவச் சிலைக்கும் பொதுப்பணித்துறை அலுவலக வளாகத்தில் உள்ள பென்னி குயிக் திருவுருவச்சிலை முன்பாக சமத்துவ பொங்கலிட்டு கொண்டாடினர்.



தென்காசி மாவட்டம் கீழப்பாவூர் தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்தில் வைத்து இனபுகையில்லா சமத்துவ பொங்கல் விழா கீழப்பாவூர் பேரூராட்சி மன்ற தலைவர் திரு. PMS.ராஜன் அவர்களின் தலைமையிலும் செயல் அலுவலர் திரு.ஜா.மாணிக்கராஜ் துணைத்தலைவர் திரு.கி.ராஜசேகர் மற்றும் பேரூராட்சி மன்ற உறுப்பினர்களின் முன்னிலையில் அனைத்து பணியாளர்களுடன் இணைந்து சமத்துவ மற்றும் புகையில்லா பொங்கல் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அதனை தொடர்ந்து பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் பேரூராட்சி பணியாளர்களுக்கு பாராம்பரியமான விளையாட்டு போட்டிகள் உற்சாகமாக நடத்தப்பட்டு வெற்றி பெற்ற நபர்களுக்கு கீழப்பாவூர் பேரூராட்சி மன்ற தலைவர் திரு.PMS.ராஜன் அவர்கள் பரிசுகள் வழங்கினார்கள். மேற்படி நிகழ்வில் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள்.செ.கோடீஸ்வரன், ரா.விஜிராஜன், மா. இசக்கிமுத்து, தா.தேவஅன்பு, சீ.பொன்செல்வன், பொதுமக்கள் மற்றும் பேரூராட்சி பணியாளர்கள் திரளானோர் கலந்து கொண்டனர்.



மறைந்த முதல்வர் எம்.ஜி.ஆரின் 109வது பிறந்தநாளையொட்டி, பள்ளிபாளையம் நகரச் செயலாளர் மற்றும் முன்னாள் நகராட்சித் தலைவர் பி.எஸ். வெள்ளியங்கிரி தலைமையில் அதிமுக நிர்வாகிகள் பள்ளிபாளையத்தில் உள்ள எம்.ஜி.ஆர் சிலைக்கு மாலை அணிவித்தனர். கட்சி ஒன்றியச் செயலாளர் செந்தில், கட்சி நிர்வாகிகள் டி.கே. சுப்பிரமணியம், ஜெயகணேஷ் மற்றும் சரவணன் ஆகியோர் உடனிருந்தனர்.



ஈரோடு மாவட்டத்தில் உள்ள சென்னிமலையில் திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் மாநில துணை தலைவரும் ,முன்னாள் சட்ட மன்ற உறுப்பினருமான விடியல் சேகர் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.இந்த நிகழ்வில் மே. த.கந்தசாமி ,ஓ.பி. தங்கவேல், நகர் தலைவர் குவாலிஸ் ராசு ,ரகுபதி சாமியப்பன், சுப்பிரமணி, ரூபி சண்முகம் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர் .



தென்காசி மாவட்டம் சுரண்டை கூட்டுறவு பண்டக சாலையில் சமத்துவ பொங்கல் விழா நடைபெற்றது. இவ்விழாவில் கூட்டுறவு சங்க நிர்வாகிகள் ஊழியர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# ஈரோடு மாநகராட்சி 24வது வார்டில் கோலாகல சமத்துவ பொங்கல் விழா மேயர் மற்றும் ஆணையாளர் பங்கேற்பு



ஈரோடு மாநகராட்சி 1-வது மண்டலத்தின் சார்பில், 24-வது வார்டுக்கு உட்பட்ட பம்பிங் ஸ்டேஷன் சாலையில் தைப்பொங்கல் திருவிழா மிகவும் விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. இந்த விழாவிற்கு 1-வது மண்டலத் தலைவர் ப.க.பழனிச்சாமி தலைமை தாங்கினார். மாநகராட்சி அதிகாரிகள், தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் அப்பகுதி மக்கள் முன்னிலையில், மகளிர் அனைவரும் ஒன்றிணைந்து சமத்துவ பொங்கல் வைத்து சூரிய பகவானுக்கு வழிபாடு செய்தனர்.

இவ்விழாவில் ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம் மற்றும் மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

பொங்கலை முன்னிட்டு நடத்தப்பட்ட கோலப் போட்டி, உறியடித்தல் உள்ளிட்ட பல்வேறு பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மேயர் மற்றும் ஆணையாளர் ஆகியோர் பரிசுகளை வழங்கிப் பாராட்டினர்.

நிகழ்ச்சியில் மாமன்ற உறுப்பினர்கள், தி.மு.க. முக்கியப் பொறுப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாகக் கலந்துகொண்டனர். விழாவின் இறுதியில் மேயர், ஆணையாளர், மண்டலத் தலைவர் மற்றும் கட்சி நிர்வாகிகள் அனைவரும் பொதுமக்களுடன் இணைந்து உற்சாகமாக 'குழு செல்பி' எடுத்து பொங்கல் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டனர்.

# ஈரோடு மாநகர் 39வது வார்டில் சமத்துவ பொங்கல் விழா:

## மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் பங்கேற்பு



ஈரோடு மாநகராட்சி நான்காம் மண்டலத்தின் சார்பில், 39-வது வார்டில் தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு சமத்துவ பொங்கல் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்த விழாவில் ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் , சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு விழாவினைத் தொடங்கி வைத்தார். மண்டலத் தலைவர் குறிஞ்சி என்.தண்டபாணி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில், மகளிர் பாரம்பரிய முறைப்படி பொங்கலிட்டு விழாவைக் கொண்டாடினர்.

இவ்விழாவிற்கு நான்காம் மண்டலத் தலைவர் குறிஞ்சி என்.தண்டபாணி தலைமை தாங்கினார். நான்காம் மண்டல உதவி ஆணையாளர் லதா, 39-வது வார்டு மாமன்ற உறுப்பினர் கீதாஞ்சலி செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேலும், தி.மு.க. முக்கியப் பிரமுகர் கேபிள் செந்தில்குமார் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள், கட்சி நிர்வாகிகள், தூய்மைப் பணியாளர்கள் என ஏராளமானோர் இந்தச் சமத்துவ பொங்கல் விழாவில் கலந்துகொண்டனர்.

ஆணையாளர் மற்றும் மண்டலத் தலைவர் ஆகியோர் பொதுமக்களுக்குப் பொங்கல் மற்றும் இனிப்புகளை வழங்கி வாழ்த்துகளைப் பகிர்ந்து கொண்டனர். மாநகராட்சி நிர்வாகமும் மக்களும் இணைந்து கொண்டாடிய இந்த விழா அப்பகுதி மக்களிடையே நெகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தியது.





# துடியலூரில் எம்.ஜி.ஆரின் 109 வது பிறந்தநாள் விழா

## PRG அருண்குமார் MLA மலர்கள் தூவி மரியாதை செலுத்தினார் பொதுமக்களுக்கு கேக் மற்றும் காலை உணவு வழங்கினர்

கோவை துடியலூர் பேருந்து நிறுத்தத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் துடியலூர் அண்ணா தொழிற்சங்க பேரவை சார்பில் முன்னாள் முதல்வர் எம் ஜி ஆரின் 109 ஆவது பிறந்தநாள் விழா விமர்சையாக கொண்டாடப்பட்டது. இதில் கவுண்டம்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் பி ஆர் ஜி அருண்குமார் கலந்துகொண்டு எம் ஜி ஆரின் திருஉருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்து பொதுமக்களுக்கு கேக் மற்றும் காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சிக்கு வந்தவர்களை அண்ணா தொழிற்சங்க துடியலூர் பகுதி கழக செயலாளர் வி ஆர் முருகேசன் வரவேற்றார். துடியலூர் பகுதி கழக செயலாளர் வனிதாமணி, ஒண்ணாவது வட்டக் கழக செயலாளர் சாந்திபூசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கவுண்டம்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் பி ஆர் ஜி அருண்குமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்த எம் ஜி ஆரின் திருவுருவப்படத்திற்கு மலர்கள் தூவி மரியாதை செய்யப்பட்டது.

தொடர்ந்து கட்சி தொண்டர்களிடையே பேசிய பி ஆர் ஜி அருண்குமார் எம் ஜி ஆரின் ஆட்சி முதல் தற்போது வரை அதிமுக ஆட்சியில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி உள்ளதாகவும், இன்றளவும் அத்திட்டங்கள் மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளதாகவும், வரும் தேர்தலில் நிச்சயம் எடப்பாடி பழனிசாமி வெற்றி பெற்று மீண்டும் முதலமைச்சர் ஆவார், அதற்கு அனைத்து கட்சி தொண்டர்களும் அயராது பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து பொதுமக்களுக்கு கேக் மற்றும் காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் கோவை வடக்கு மாவட்ட மருத்துவ அணி செயலாளர் டாக்டர் துரைசாமி, ஐ டி விங் வடக்கு மாவட்ட செயலாளர் மணிகண்டன், 1வது வட்டக் கழக அவை தலைவர் செல்வகுமார், சின்னவேடம்பட்டி பகுதி கழக செயலாளர் மாரிசாமி, இரண்டாவது வட்டக் கழக செயலாளர் ஜெயக்குமார், சின்னவேடம்பட்டி வட்டக் கழக செயலாளர் மாரப்பன், இரண்டாவது வட்ட கழக பொருளாளர் திருநாவுக்கரசு, முன்னாள் நகர செயலாளர் மோகன்ராஜ், 15 வது வட்டக் கழக செயலாளர் சுரேஷ்குமார், 14 வது வட்ட கழக செயலாளர் பிரகாஷ், இரண்டாவது வட்டக் கழக செயலாளர் வி என் காளிச்சாமி, துடியலூர் பகுதி கழக அவை தலைவர் ஐ டி ஐ ஜெயராஜ், 15 வது வார்டு இணைச் செயலாளர் அண்ணாமலை, இளம் பெண்கள் பாசறை கௌதம், அம்மா பேரவை செயலாளர் கவிச்சந்திரமோகன், இரண்டாவது துணைச் செயலாளர் ராஜன், இரண்டாவது வட்டக் கழக உறுப்பினர் ராஜகோபால், பெரியநாயக்கன்பாளையம் கிழக்கு ஒன்றிய வர்த்தக அணி செயலாளர் செல்வகுமார், பகுதி கழக வர்த்தக அணி செயலாளர் முத்து, 1வது வட்டக் கழக இணை செயலாளர் சுசீலா, 15 வது வட்டக் கழக செயலாளர் சுரேஷ் பாபு, 1 வது வட்டக் கழக முன்னாள் துணைச் செயலாளர் ராஜாத்தி, அண்ணா தொழிற்சங்க உறுப்பினர்கள் சின்னசாமி என்கிற பிரபு, சேகர், நாகராஜ், ஆறுச்சாமி, ரவி மற்றும் மருதாசலம், சதீஷ்குமார், ராமசாமி, விஜயா, முருகன், தனா, சாந்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இறுதியில் கிளை தலைவர் கண்ணதாசன் நன்றி கூறினார்.

# ஈரோடு மாநகராட்சியில் உற்சாகமான சமத்துவ பொங்கல் விழா

## மேயர், ஆணையாளர் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் பங்கேற்பு



தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, ஈரோடு மாநகராட்சி இரண்டாம் மண்டலத்திற்குட்பட்ட மாணிக்கம்பாளையம் பகுதியில் சாதி, மத பேதமற்ற சமத்துவ பொங்கல் விழா மிகச் சிறப்பாகவும் எழுச்சியுடனும் நடைபெற்றது.

இந்த விழாவிற்கு மண்டலத் தலைவர் காட்டு சுப்பு (எ) மு.ப.சுப்ரமணியம் தலைமை தாங்கி, விழாவிற்கான ஏற்பாடுகளை முன்னின்று கவனித்தார். விழாவில் ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, பொங்கல் பானைக்குப் பூஜைகள் செய்து விழாவினைத் தொடங்கி வைத்தார்.

மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் ஐஏஎஸ், மாநகராட்சி துணை மேயர் செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகித்து சிறப்பித்தனர். விழாவில் பாரம்பரிய முறைப்படி புதுப்பானையில் பச்சரிசி, வெல்லம் இட்டு பொங்கலிட்டு, "பொங்கலோ பொங்கல்" என முழக்கமிட்டு மக்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

அரசு அதிகாரிகள், மாநகராட்சி உறுப்பினர்கள் மற்றும் அப்பகுதி பொதுமக்கள் என ஏராளமானோர் சமத்துவ பொங்கல் விழாவில் பங்கேற்று ஒருவருக்கொருவர் வாழ்த்துகளைப் பரிமாறிக்கொண்டனர். மாநகராட்சியின் நிர்வாகத்தலைவர்களும், அதிகாரிகளும் பொதுமக்களோடு இணைந்து பொங்கல் கொண்டாடியது இப்பகுதி மக்களிடையே பெரும் நெகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தியது. மேலும் இந்த நிகழ்ச்சியில் மாணவ, மாணவிகளின் பரதநாட்டியம், சிலம்பாட்டம், மல்லர் கம்பம் சாகசம், சதுரங்கப் போட்டி, கேரம் போர்டு, டேபிள் சேர் போன்ற பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்கப்பட்டது.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி ஜனவரி 16 திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு காரைக்குடி என்.ஜி.ஓ காலனியில் உள்ள திருவள்ளுவர் சிலைக்கு காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் மாங்குடி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் இதில் அரசு வழக்கறிஞர் பாலசுப்பிரமணியன் முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் சொக்கலிங்கம் முன்னால் சங்கராபுரம் ஊராட்சி மனற உறுப்பினர் கணபதி மற்றும் என்.ஜி.ஓ காலனி சங்க நிர்வாகிகள் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்





சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி அலுவலகத்தில் நகர மன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி அவர்களின் தலைமையில் தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு திராவிட சமத்துவ பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. இதில் பொங்கல் வைத்து, குத்துவிளக்கேற்றி, சூரிய பகவானை வணங்கி, அனைவருக்கும் பொங்கல் வழங்கப்பட்டு தமிழர் திருநாளாம் தை பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள் அனைவருக்கும் தெரிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது. இந்நிகழ்வில் நகர் கழக செயலாளர் பொன்னுசாமி, நகர் மன்ற துணைத் தலைவர் பாலசுந்தர், நகராட்சி அலுவலக ஊழியர்கள், திமுக நிர்வாகிகள், அனைத்து நகர்மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# மானாமதுரையில் திராவிட பொங்கல் விழா





தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் ஆணைப்படி தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு திராவிட பொங்கல்விழாநடைபெற்றுவருகிறது.அதன் ஒரு பகுதியாக சிவகங்கை மாவட்ட கழக செயலாளரும், கூட்டுத்துறை அமைச்சருமான கே. ஆர். பெரியகருப்பன் அறிவுறுத்தலின்படி, மானாமதுரை நகராட்சிக்குட்பட்ட பகுதி வார்டு எண் 11,13,24,25 ஆகிய வார்டு பகுதிகளில் மானாமதுரை நகர திராவிட முன்னேற்ற கழகம் சார்பாக திராவிட பொங்கல் விழா மானாமதுரை கன்னார் தெரு பகுதியில் திமுக நகர் கழகச் செயலாளர் பொன்னுசாமி தலைமையிலும், அருண் காந்தி முன்னேற்பாட்டிலும் திராவிட சமத்துவ பொங்கல் விழா கொண்டாடப்பட்டு அனைவருக்கும் பொங்கல் வழங்கபப்பட்டு அப்பகுதியுள்ள ஏழை எளிய பொதுமக்கள் மற்றும் கட்சியினர் வேட்டி சேலைகள் வழங்கப்பட்டது.இந்நிகழ்வில்மானாமதுரை நகர திமுக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், திமுக இளைஞரணி, சிறுபான்மை நல பரிவு அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, தொண்டரணி, கட்சித் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு திராவிட சமத்துவ பொங்கல் விழாவை சிறப்பித்தனர்.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.